මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல 02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

LAE\2023\47

2023.04.11

தேர்தல் ஆணைக்குழு உள்ளூர் அதிகார சபைகளின் தேர்தல்களை உரியவாறு நடாத்துவதற்காக பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியிலும் கூட பணிகளை மேற்கொண்டதோடு, அதற்குத் தேவையான நிதி கிடைக்கப் பெறாமை மற்றும் ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட விதத்திலான விடயங்கள் என்பவற்றின் காரணமாக, 2023.04.25 ஆம் தேதியன்று நடாத்தப்படவிருந்த தேர்தல்களை இரண்டாவது முறையும் ஒத்திவைக்க வேண்டியுள்ளது. ஆதலால் உரிய உள்ளூர் அதிகார சபைகளின் தேர்தல்களை நடாத்துவதற்குத் தேவையான நிதி கிடைக்கப் பெறுகின்ற குறிப்பான திகதி அல்லது உயர் நீதிமன்றத்தின் முன்னால் காணப்படுகின்ற வழக்குகளுக்கமைய கௌரவ நீதிமன்றத்தினால் வழங்கப்படுகின்ற தீர்ப்பின் அடிப்படையில் ஒரு திகதியை தீர்மானிக்க வேண்டிவரின் அத்திகதி ஆகிய இரண்டு திகதிகளில் முதலில் வரக்கூடிய தினத்தன்று உள்ளூர் அதிகார சபைகளின் தேர்தல்களை நடாத்துவதற்கான திகதியைத் தீர்மானித்தல் தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களினால் மேற்கொள்ளப்படவுள்ளது. எவ்வாறாயினும் தேர்தல் ஆணைக்குழு உள்ளூர் அதிகார சபைகளின் தேர்தல்களை துரிதமாக நடாத்துவதற்கு எடுக்க முடிந்த அனைத்து செயல்பாடுகளையும் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லுமெனவும் அறிவிக்கப்படுகின்றது.

தேர்தல் ஆணைக் குழுவின் கட்டளை பிரகாரம்

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்